[திரு. இராம வீரப்பன்] [1991 ஜூலை 8

அவர்களும், மற்றவர்களும் ஒரு அமைதியான சூழ்நிலை இங்கே ஏற்பட வேண்டும், நாட்டிலே ஏற்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு உறுதுணையாக தெரிந்தோ, தெரியாமலோ திட்டமிட்டு மற்றவர்கள் தூண்டுகிற வலையில் நம்முடைய டாக்டர் ராமதாஸ் அவர்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள்.

10-05 மணி

நேற்று பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்து இருப்பீர்கள். டாக்டர் ராமதாஸ் அவர்கள் வாய் திறந்து பேசவில்லை; கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்று. ஆனால் பக்கத்தில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன், அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தவே மாட்டார், என்கிறார். அப்படியானால் அவர் இன்னும் உயிரோடு இருக்கக் கூடாது என்று அவர் எண்ணுகிறாரா? அப்படி அவர் இருந்தால் அந்தத் தலைமைப் பதவி தனக்குக் கிடைக்காமல் போய்விடுமென்று கருதுகிறாரா என்று நமக்குத் தெரியாது. எந்த உறுப்பினரும் தயவு செய்து..(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தைத் தெரிவித்து விட்டார்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் மேலும் பேசுவது ஒரு சுமூகமான சூழ்நிலைக்கு உதவாது என்று கருதுகிறேன். அடுத்த அலுவலுக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதை மேற்கொண்டு வளர்க்க வேண்டாம். உறுப்பினருக்கு உறுப்பினர் பேச வேண்டாம். தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப் புள்ளி வைக்கலாமென்று கருதுகிறேன்.

4. அரசினர் தனித் தீர்மானம்.

காவிரி நீர்ப் பங்கீடு குறித்து நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையை அமல் நடத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிய அரசினர் தனித் தீர்மனம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உயிர்நாடி, காவிரியில் இருக்கிறது. தமிழ்நாட்டில் கால்வாய்ப் பாசனத்தைச் சார்ந்த நிலங்களில் 85 விழுக்காடு நிலங்கள், காவிரி நீரை நம்பியுள்ளன. காவிரி நீரை உபயோகிப்பதில், தமிழ்நாட்டுக்குள்ள உரிமை மிகவும் பழமை வாய்ந்தது. அவ்வுரிமை, தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திற்கும் இடையே ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு மற்றும்

1991 ஜூலை 8] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும், கர்நாடகம் தன்னிச்சையாக இவ்வுடன்படிக்கை விதிகளை மீறி, தனது எல்லைக்குள் 1958ஆம் ஆண்டிலிருந்து நீர்த்தேக்கங்களைக் கட்ட ஆரம்பித்தது. அவ்வாறு அணைகள் கட்டுவதற்கு, தமிழ்நாடு அப்போதிலிருந்தே தன்னுடைய எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்துள்ளது. 1974ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீரை முறையற்ற வகையில் கர்நாடகம், தனது நீர்த்தேக்கங்களில் தேக்கி, பாசனத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. அதோடு, ஆண்டுதோறும் தனது எல்லைக்குள் காவிரி நீரின் பாசனப்பரப்பை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வரவேண்டிய நீர், ஒவ்வோராண்டும் குறைந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் காவிரிப் படுகையில் பல லட்சம் ஏக்கரா நிலங்களில் சாகுபடி பாதிக்கப்படுகிறது. குறுவை சாகுபடி அறவே பாதிக்கப்படுகிறது. அதோடு, ஒருபோக சம்பா சாகுபடியும், வானம் பார்த்து காத்துக்கிடக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினையை, பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள ஏறத்தாழ 20 ஆண்டுகளாக பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றன. குறிப்பாக, 16-6-1986 அன்று, பெங்களூரில் மத்திய நீர்வள் அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த படுகை மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தில் அன்றைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததாக அறிவித்து, காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கேற்ப 6-7-1986 அன்று மைய அரசுக்கு 1956ஆம் ஆண்டு பன் மாநில நதி நீர்த்தாவா சட்டப்படி, நடுவர் மன்றம் அமைக்குமாறு விண்ணப்பம் அனுப்பப் பட்டது. தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள் விவசாயிகள் நல உரிமைப் • பாதுகாப்புச் சங்கம், 1983இல் தொடுத்திருந்த ரிட் மனுவின் பேரில், உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டின் விண்ணப்பத்தை ஏற்று 2-6-1990இல் மைய அரசு காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைத்து, அறிக்கை வெளியிட்டது.

10-10 மணி

28-7-1990 அன்று கூடிய நடுவர் மன்றத்தின் முதல் கூட்டத்திலேயே தமிழ்நாடு அரசு இடைக்கால நிவாரண ஆணை கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. இதன்மீது படுகை மாநிலங்களின் கருத்துக்களையும் வாதங்களையும் கேட்டறிந்த பின், மைய அரசு தனக்கு அனுப்பிய ஆவணங்களில் இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றி ஏதும் குறிப்பிட்டுச் சொல்லாததால், தமிழ்நாட்டின் மனுவின் மீது ஆணை பிறப்பிப்பதற்கில்லை என்று நடுவர் மன்றம் 5-1-1991 அன்று தீர்ப்பு வழங்கியது.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 ஜூலை 8

அதையடுத்து தமிழ்நாடு 10–1–1991 அன்று உச்ச நீதி மன்றத்தில் சிறப்பு அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. இதன்மீது உச்ச நீதிமன்றம் தனது 26–4–1991 ஆம் நாளைய தீர்ப்பில் ஏற்கெனவே மைய அரசு காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றத்திற்கு அனுப்பியுள்ள ஆவணங்களிலேயே இடைக்கால நிவாரணக் கோரிக்கையும் அடங்கும் என்று கூறி, இடைக்கால நிவாரண மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று ஆணையிட்டது.

அதன்பேரில் காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் இடைக்கால நிவாரணத்திற்கான குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும் கேட்டுப் பெற்று, படுகை மாநில வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டு, தன் இடைக்காலத் தீர்ப்பை 25–6–1991 அன்று வழங்கியது. இந்தத் தீர்ப்பில்:

(அ) இடைக்கால நிவாரண மனுக்களை விசாரித்து ஆணை வழங்கலாம் என்ற உச்சநீதி மன்றத்தின் ஆணை நடுவர் மன்றத்தையும், படுகை மாநில அரசுகளையும் கட்டுப்படுத்தும் ஆதலால் அம் மனுக்களை நடுவர் மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) கர்நாடகம் ஆண்டொன்றிற்கு மேட்டூர் நீர்த் தேக்கத் திற்கு 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில் தனது நீர்த் தேக்கங்களிலிருந்து நீர்விட வேண்டுமென்றும், அதில் மாதவாரி யாக எந்தெந்த அளவு விட வேண்டுமென்றும், அந்த அளவுகள் நான்கு வாரங்களில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(இ) அத்தோடு கர்நாடக மாநில் அரசு தந்த கணக்கு களையே அடிப்படையாகக் கொண்டு, கர்நாடகம் தனது மாநில எல்லைக்குள் காவிரிப் படுகையில் தற்போது பாசனம் செய்து வரும் 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசன விரிவாக்கம் செய்யக்கூடாதென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) இந்த இடைக்கால உத்தரவு, காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் இப்பிரச்சினையில் இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரைதான் அமலிலிருக்கும் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் காவிரிப் பாசனத்திற்கு நடுவர் மன்றத் தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள 205 டி.எம்.சி. நீர் போதுமானது அல்ல. 1974 ஆம் ஆண்டிற்கு முந்தைய 10 ஆண்டுகளில் ஜூன் முதல் ஜனவரி வரை வந்த நீர் வரத்து சராசரி 302 டி.எம்.சி என்ற புள்ளி விவரங்களைக் காட்டி, அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் பழைய பாசனத்தைப் பாதுகாக்கப் போதுமான நீர் அளிக்க வேண்டும் என நடுவர் மன்றத்தின் முன் வாதாடி னோ இருப்பினும் நடுவர் மன்றம் தமிழ்நாட்டிற்கு

1991 ஜூலை 8] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

இடைக்கால நிவாரணமாக மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. மட்டுமே கிடைக்குமாறு தீர்ப்பளித்துள்ளது. ஆயினும், நடுவர் மன்றம் அனைத்துப் புள்ளி விவரங்களையும் பெற்று, பல தரப்பு விவரங்களையும் கேட்டறிந்ததின், தனது இறுதித் தீர்ப்பில் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக நீர் வழங்கும் என்ற நம்பிக்கையோடும், பிரச்சினையை மேலும் வளரவிடாது மாநிலங்களிடையே நல்லுறவு நிலவ வேண்டுமென்ற எண்ணத்தோடும், காவிரிப் படுகை உழவர் பெருமக்களின் உடனடி நலன் கருதியும் தமிழ்நாடு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் கர்நாடக மாநில அரசோ, இவ்விடைக்காலத் தீர்ப்பு தனக்குச் சாதகமாக இல்லை என்று கூறி ஏற்க மறுப்பதாகத் தெரிகிறது. நடுவர் மன்றம் அளித்த இடைக்கால உத்தரவு தம் அரசைக் கட்டுப்படுத்தாது என்றும், அவ்வுத்தரவின்படி தாம் தமிழ்நாட்டிற்கு நீர் விடப்போவதில்லை என்றும் கர்நாடக முதல்வர் கூறி வருகிறார். 6-7-1991 அன்று கூடிய கர்நாடக மேலவையும், பேரவையும், இவ்விடைக்கால உத்தரவின்படி நடக்கவேண்டாமென்று அரசுக்கு பரிந்துரைசெய்து தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

10.15 மணி

நடுவர் மன்றத்தின் உத்தரவு இந்த ஆண்டு ஜூலை முதல் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்று தீர்ப்பிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மன்றத்தின் உத்தரவின்படி நீரை விடுமாறு தமிழக பொதுப்பணித்துறைச் செயலர், கர்நாடக நீர்ப் பாசனச் செயலருக்கு டெலக்ஸ் மூலம் இம்மாதம் முதல் தேதியே செய்தி அனுப்பினார். இம்மாதம் 3ஆம் தேதியன்று நானும் கர்நாடக முதல்வர் திரு. பங்காரப்பாவிற்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பியுள்ளேன். அதில் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிட முடியவில்லை என்றும், காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி ஆரம்பிப்பதில் அதிக தாமதம் ஏற்பட்டிருக்கிறதென்றும், நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி உடனே கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். பின் 5ஆம் தேதி பாரதப் பிரதமருக்கும் கர்நாடகத்தின் செயலால் ஏற்பட்டிருக்கும் சிக்கலை எடுத்துரைத்து நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடகம் ஏற்று அமல்படுத்த அறிவுரைகள் அளிக்க வேண்டும் என்ற அவசரச் செய்தியையும் அனுப்பியுள்ளேன். இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றபின் சட்டப்பூர்வமாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மைய அரசால் நியமிக்கப்பட்ட உயர்நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பை மதிக்க மாட்டோம் என்றும் அது தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் கர்நாடக அரசு கூறுவது நியாயமற்றதும், மிகவும் வருந்தத் தக்கதுமாகும். தமிழகத்தின் தலையாய பிரச்சினையில்

இப்பேரவை ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளது என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"ஆண்டொன்றுக்கு மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில் கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து வாரர்ந்திர அடிப்படையில் நீர்விடப்பட வேண்டும் என்பதுடன். மேலும் சில உத்தரவுகளையும் பிறப்பித்துள்ள காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் 25—6—1991ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையை நிராகரிக்கும்படி, கர்நாடக அரசை வற்புறுத்திக் கர்நாடக மாநிலத்தின் இரு சட்டமன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றியதாக பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் இப்பேரவைக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளன.

வழக்கமாக ஜூன் 12-ம் தேதி பாசனத்திற்குத் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் நீர்த்தேக்கம், நீர் இருப்புக் குறைவாக இருப்பதாலும், நடுவர் மன்றத்தின் ஆணைக்கிணங்க நீர் திறந்து விடுவது பற்றி கர்நாடக அரசிடமிருந்து உறுதியான அறிகுறிகள் இல்லாத நிலையிலும், இன்னும் திறக்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக உள்ளது.

நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்கால நிவாரண ஆணை இம்மாநிலத்தின் தேவையையும் மற்றும் மாநில அரசினால் கோரப்பட்ட நீர் அளவையும் விட மிகக் குறைவாக இருப்பினும் ஒவ்வொரு மாநிலமும் இவ்வாணையின்மீது மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருப்பினும், 1956ஆம் ஆண்டைய நதி நீர்த் தகராறு சட்டத்தின்படி, சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட உயர் அதிகாரம் வாய்ந்த நடுவர் மன்றத்தின் ஆணை முற்றிலும் மதிக்கப்பட வேண்டும் என்பது இப்பேரவையின் உறுதியான கருத்தாகும்.

இம்மாநிலத்திற்கு உரிய தண்ணீரை 1974 ஆம் ஆண்டிலிருந்து கர்நாடகம் நியாயமற்ற முறையில் தனது நீர்த் தேக்கங்களில் தேக்கி பயன்படுத்தி வந்துள்ளதன் காரணமாக, இம்மாநிலத்திற்கு ஏற்பட்டு வரும் இன்னல்கள் இனியும் தொடர விடக்கூடாது எனப் பேரவை கருதுகிறது.

எனவே, நடுவர் மன்றத்தின் ஆணையை உடனடியாக அமலாக்க வேண்டுமென கர்நாடக அரசை இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

1991 ஜூலை 8] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

தேவையெனில், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை மைய அரசு உடனடியாக அரசிதழில் பிரசுரிக்குமாறு இப்பேரவை கேட்டுக் கொள்கிறது. மேலும், நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்தும்படி கர்நாடக அரசை வலியுறுத்துமாறு மைய அரசையும் இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி உறுப்பினர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம், திரு. ஜி. விசுவநாதன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இராமதாஸ் அவர்களைக் கைது செய்திருப்பதை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்.)

திரு. வி. தம்புசாமி : நானும் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. வி. தம்புசாமி வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குப் போய்விட்டோம். அப்படியானால் இதில் வெளிநடப்புச் செய்கிறீர்களா? இப்போது வெளிநடப்புச் செய்திருப்பது ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதை எதிர்த்து வெளிநடப்புச் செய்வதாகத்தான் பொருள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துகூட கேட்கக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேறு பிரச்சினை. கருத்துக் கூற உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் அனுமதி கேட்டார்கள். நான் இங்கே பதில் சொல்லியிருக்கிறேன் அவர்களுக்கு. இப்போது எந்த அனுமதியும் கோராமல் ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறுகின்ற தீர்மானத்தின் மீது அவர் வெளிநடப்புச் செய்கிறாரா? மாண்புமிகு அவை முன்னவர்.

10-20 மணி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே இந்த அவையிலே நீண்ட நெடுங்காலமாக கடைபிடிக்கப்படுகிற ஒரு நடைமுறை,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1991 ஜூலை 8

ஒத்தி வைப்புத் தீர்மானம் ஆளுநர் பேருரையின் மீதான விவாதம் நடைபெறுகிறபோது எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அதுமட்டுமல்லாமல், வரவு—செலவுத் திட்ட விவாதத்தின்போது ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கலந்துகொள்கிற உறுப்பினர்கள் தாங்கள் என்ன கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்பு கிறார்களோ அந்தக் கருத்தை தன்னுடைய விவாதத்திலே எடுத்து குறிப்பிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் பொது வாக நிதிநிலை அறிக்கை விவாதம் நடைபெறும்போது ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கு மேலாக உண்ணாவிரதம் என்கிற அந்த வகையிலே வருகின்ற எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் சிவசண்முகம் பிள்ளை காலத்திலிருந்து தொடர்ந்து எடுத்துக்கொள்வதில்லை. எதிர் பாராமல் நம்முடைய சட்டத்திற்கு விரோதமான, அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உணர்த்துகிற அளவுக்கு வரு கின்ற அந்தத் தீர்மானம்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே வரும். ஆகவே உறுப்பினர்கள் எந்தக் கருத்துக்களின் அடிப் படையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டு மென்று விரும்புகிறார்களோ, அதை விவாதத்திலே கலந்து கொள்ளும்போது, அந்தக் கருத்தை முறைப்படி எடுத்து வைக் கிற வாய்ப்பு இருப்பதால் இப்போது ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு அவசியம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே.....

டாக்டர். தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு தன்றி கூறும் தீர்மானத்தின் மீது தாங்கள் பேசுகிறபோது அந்தக் கருத்தை நீங்கள் பேசலாம். பேசுவதற்கு வாய்ப்பு உண்டு (குறுக்கீடு). இந்தப் பிரச்சினையை எழுப்புவது முறை யல்ல.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சூழ்நிலையில் நீங்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்புவது மரபு இல்லை என்று சொன்னேன்.

(திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் தே. குமாரதாஸ் : வெளி நடப்புச் செய்தனர்).

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். தீர்மானத்தை திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் முன்மொழிவார்.